செ.கு. எண் : 440

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 7.12. 2012

சென்னை, பெருங்குடி, கல்லுக்குட்டை, அம்பேத்கார் புரட்சி நகரைச் சேர்ந்த திரு. பாண்டியன் என்பவரின் மகன் மோகன் 3.12.2012 அன்று தரமணி பிரதான சாலை அருகே உள்ள மின்கம்பத்தினை தொட்டதில் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த மோகனின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான மோகனின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9